**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 30.06.2023
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்**

**மற்றும்**

**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வளப்பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்**

இந்த கல்வியாண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்திற்கும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப்பல்கலைகழகத்திற்கும், ஒரே விண்ணப்பம் வழியாக மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. இந்த கல்வியாண்டில் 14 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும், 3 பட்டயப்படிப்புகளுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் 6 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும் மற்றும் மூன்று தொழில்முறை பாடப்பிரிவுகளுக்கும் ஒரு மித்தவகையில் சேர்க்கை நடைபெற உள்ளது.

தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. விண்ணப்பித்திருந்த மாணவர்களில் எவரேனும் மேல்நிலை வகுப்பில் பெற்ற மதிப்பெண்களில் மறுமதிப்பீட்டிற்கு (Revalidation) விண்ணப்பித்திருந்து, அவற்றின் மூலம் அவர்களின் மதிப்பெண்களில் மாற்றம் இருந்தாலோ அல்லது ஏற்கனவே வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில் ஏதேனும் மாற்றம் இருந்தாலோ 02.07.2023 மாலை 5 மணிக்குள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் (Email) முகவரிக்கு தகுந்த ஆதாரங்களுடன் வேண்டுகோளை சமர்ப்பிக்கும்படி இக்குறிப்பின் மூலம் கோரப்படுகிறார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**